Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (7 8-66) இதழ் 178
பராபவ ஆடி 22 ரபி: ஆகி 19 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்


டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு

**'ஈழநாடு'**
(7-8 66)
**பிந்திய பதிப்பு**
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 21-வது மகாநாட்டின் இன்றைய நிகழ்ச்சிகள் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமைப் பேருரையுடன் இன்று நண்பகலுக்கு முன் 'ஈழநாடு' பிந்திய பதிப்பு யாழ்ப்பாணநகரில் வெளிவரும்

# தமிழர் பிரச்னைகளுக்கு தேசியரீதியில் தீர்வு

## இன்று ஆரம்பமாகும் காங்கிரஸ் மகாநாட்டில் ஜி. ஜி. தெரிவிப்பார்

### கோலாகலத்துடன் மகாநாடு இன்று காலை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் இருபத்தியோராவது மகாநாடு இன்று காலை தமிழ்மக்களின் தலைநகரமெனக் கருதப்படும் யாழப்பாணத்திலுள்ள நகரமண்டபத்தில் அழகுற அமைந்துள்ள இராமநாதன் அரங்கில் காங்கரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் ஆரம்பமாகிறது.

இன்று பகல் நடைபெறும் மகாநாட்டில் முக்கியமான பல தீர்மானங்கள் விவாதிக்பப்பட்டு நிறைவேற்றப்படவிருக்கின்றன, யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரிகளை இணைத்து இந்துப்பல்கலைக்கழகமொன்றைஅமைக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமும் மொழிப்பிரச்னை பிரஜாவுரிமைப் பிரச்னை மற்றும் தேசியப் பிரச்னைகளை தேசியரீதியில் நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு சர்வகட்சிகளின் மகாநாடு கூட்டப்பட வண்டுமெனக் கோரும்தீர்மானமும் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

இந்துசர்வகலாசாலை, சர்வகட்சி மகாநாடு, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில் அபிவிருத்தி. காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி, அரசியல் அமைப்பிலுள்ள 29-வது ஷரத்து ஆகியவை பற்றி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் குறிப்பிடுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பொன்னம்பலத்தின் தலைமைப் பேருரை, திரு. சிவசிதம்பரத்தின் வரவேற்புரை மற்றும் மகாநாட்டு நிகழ்ச்சிகளுடன் இன்று நண்பகலுக்கு முன் 'ஈழநாடு' பிந்திய பதிப்பு வெளியாகும்.

காலை 9 மணிக்கு காங்கிரஸ் கொடி ஏற்றிவைப்பதுடன் கட்சிக்கீதம் இசைக்க மகாநாடு ஆரம்பமாகிறது.

வவனியா எம். பி. யும் மகாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. தா. சிவசிதம்பரம் வரவேற்புரை நிகழ்த்துவார். காரியதரிசியினதும் தனாதிகாரியினதும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதும் காலை பத்து மணிக்கு தலைவர் திரு. பொன்னம்பலம் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்துவார்.

மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவனியா, திருக்கோணமலை ஆகிய வெளியூர்களிலிருந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளும் ஆதரவாளர்களும் யாழ்ப்பாண நகரில் உள்ள காங்கிரஸ் காரியாலயத்துக்குவந்து கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீதிகளில் செல்லும் மோட்டார் கார், வான்களிலும் தமிழ்க்காங்கிரஸின் நால்வர்ணக் கொடிகள் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

நேற்று முற்பகல் கொழும்பிலிருந்து விமானத்தில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மகாநாட்டு ஏற்பாடுகளையும் இதர மந்திரிமாரையும் வரவேற்பதற்கான ஒழுங்குகள் பற்றியும் ஆராய்ந்து, செய்யவேண்டிய இதர அலுவல்களைப் பற்றிக் காங்கிரஸ் தொண்டர்களுக்கு உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

இன்று மாலை யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் முதலியார் ஸி. முத்துத்தம்பி தலைமையில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் மேளக்கச்சேரியும். இன்னிசைநிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

## "8 சதமாக இருந்த ரூபாயின் மதிப்பு 18 சதமாக உயர்ந்து'

### பார்லிமெண்டில் சுகாதார அமைச்சர்

கொழும்பு, சனி

சென்ற வருடத்தில் இலங்கை ரூபாயின் மதிப்பு 8 சதமாகத் தானிருந்தது. ஆனல் இன்று அதன்மதிப்பு 18 சதமாக உயர்ந்துள்ளது. இதற்கு அந்நிய செலாவணி அதிகரித்திருப்பதே காரணமாகும்"

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. எம்.டி எச். ஜயவர்த்தன இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில்வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் கூறினர்.

உலக வங்கியின் யோசனையை ஏற்றுக் கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்பாக)


## நாடு திரும்பும் பர்மா, இலங்கை இந்தியர்

### தொழிற்பயிற்சி, குடியேற்ற திட்டம்பற்றி பக்தவத்சலம்

சென்னை, ஆகஸ்ட் 6

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தமிழ் நாட்டுக்கு திரும்பிவரும் இந்திய வம்சாவழி மக்களுக்கு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கு சதிகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

தொழிற்பயிற்சிநிறுவனங்களில் இவர்களுக்கென ஐந்து சத வீத இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக முதல் அமைச்சர் கூறினர். கல்வித் தகுதி. வயது வரம்பு விதிகளும் இவர்களுக்காக தளர்த்தப்பட்டுள்ளதாகவும் பயிற்சிக்காலத்தில் சிறிய தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினர்.

பர்மாவிலிருந்து திரும்பும் தமிழர்களை அந்தமான் தீவுகளில் குடியேற்ற ஏற்பாடு செய்ய படுவதாக உணவு மந்திரி திரு. ராமையா சபையில் கூறினர். அந்தமான் தீவுகளிலுள்ள ரப்பர் தோட்டங்களில் குடியேற 130 குடும்பங்கள் சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் 750 விவசாய குடும்பங்களை குடியேற்ற மத்திய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகவும் மந்திரி சொன்னர். நெல் சாகுபடி செய்த மக்களை ரப்பர் தோட்டங்களில் அமர்த்துவது அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்குமென அங்கத்தவர் சிலர் கூறியதற்கு மந்திரி பதிலளிக்கையில், இதுபற்றி நேரில் சென்று அறிவதற்கு ஓர் அதிகாரி பர்மா செல்லவிருப்பதாகத் தெரிவித்தார்.

## தென்வியட்நாமில் மேலும் அமெரிக்க துருப்புகள் இறக்கம்

### இவ்வாண்டுக்குள் 4 லட்சம் பேர்!

சைகோன், ஆக 6

அமெரிக்கா தெற்குவியட்நாமில் இன்று மேலும் 3000 துருப்புக்களை இறக்கியது.

இத்துடன் சேர்த்து மொத்தம் தென்வியட்நாமிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கை 2,85,090 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்த ஆண்டுக்குள் அங்கு 4 லட்சம்துருப்புக்கள் இருக்கும் என அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கிறர்கள்.

வடவியட்நாமுக்குள் துருப்புக்கள் அனுப்பும் உத்தேசம் இப்போது கிடையாது என வெளிநாட்டு மந்திரி ரஸ்க் கூறினர். எனினும் இது வருங்காலத்தை பொறுத்த விஷயம் என்றும் அவர் கூறினர்.

## "அரசியல் காரணமாக பழிவாங்கவேண்டாம்"

### ஆர். ஜி. கிளப்பிய பிரச்னைக்கு நீதிமந்திரி பதில்

கொழும்பு, சனி

தமிழ்மொழிச்சட்ட விதிகள் கொண்டுவரப்பட்டபொழுது அதை எதிர்த்து வேலைநிறுத்தம்செய்த அரசாங்க ஊழியர் மீது எவ்வித நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி அரசாங் [illegible] தாகவும் ஆனல் எவர்மீதும் அரசியல் வஞ்சம் தீர்க்கும் எண்ணம் கிடையாதென்றும் நிதிமந்திரி திரு யு.பி. வன்னிநாயகா இன்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது தம்பதெனியா எம்.பி.

(3-ம் பக்கம் பார்க்க)

## வில்சன் இந்திய விஜயம் ஒத்திவைப்பு

லண்டன், ஆக. 6

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனின் இந்திய விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதி காந்தியின் அழைப்பின் மீது அக்டோபரில் அவர் வரவிருந்தார். ஆனல் அக்டோபர் 18-ம் திகதி பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூடவிருப்பதால் அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுக்கு, இந்தியாவின் அழைப்பை ஸ்ரீமதி காந்தி மீண்டும் புதுப்பித்திருக்கிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

**புதிய பிரவேசங்கள்**

பொதுக் கலை தராதரம், ஜி. ஸி. ஈ. உயர்தரம், கலை / விஞ்ஞானம், ஜி. ஸி. ஈ. சாதாரணம்/ கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகிய வகுப்புகளிற் புதிய பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகளுண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 824

**வகுப்புகள்**

ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்றும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

### விற்பனைக்கு

**கிட்டங்கி**

யாழ்ப்பாணம் பழைய தபாற்கந்தோருக்கு கிழக்கே கடற்கரை வீதிக்கும் பாங்ஷால் வீதிக்கும் முன்புறமாக 4 பரப்பு விஸ்தீரணமும் 8.15 குளியுமுள்ள கிட்டங்கி முழுதாகவும் பகுதி பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. முழுவதுக்கும் ரூ. 75,000 க்கு மேல் வரும் கேள்விகள் ஏற்கப்படும். பின் வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். எஸ். அமிர்தலிங்கம், 477/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 827

**காணி**

வல்வெட்டித்துறை - உடுப்பிட்டி ரோட்டில், வல்வெட்டியில் ''பாவந்தோடம்'' என்றழைக்கப்படும் காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். சி. கதிரவேற்பிள்ளை, டில்கிகா, யாழ்ப்பாணம். 828

**காணி**

யாழ்ப்பாணம் அரசடிவீதியில் இந்துமகளிர் கல்லூரிக்கும் கந்தர்மடம் சந்திக்கு மிடையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 831

### வைத்தியம்

நோய்வு, கசம், நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING
Cliff Robrtson
in
633 SQUADRON
(War Film) (Cinemascope-Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
PAPA'S DELICATE CONDITION
(Eastman Color)

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
''பூமாலை''

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
பணத்தோட்டம்

லைப்சிக், ஆக. 5

ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலிருந்து 1000-க்கும் அதிகமான வெளிநாட்டு மாணவர்கள், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள லைப்சிக் பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்கின்றனர். 100க்கு அதிகமான வெளிநாட்டுப் பட்டதாரி மாணவர்கள் டாக்டர் பட்டத்துக்கும் விசேஷ டாக்டர் படிப்பிலும் இங்கு ஈடுபட்டுள்ளனர்.

11-ந் திகதி வியாழன் முதல்
கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
சிவாஜி, எஸ். எஸ். ஆர்,
எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன்,
நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்
பழநி

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ் - அஞ்சலிதேவி
நடித்த
லவகுச



நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற ஆண்டாள் நாட்டிய நாடகத்தில் ஆண்டாளாக நடித்த செல்வி திரிபுர சுந்தரி குமாரசாமியின் ஓர் அபிநயத் தோற்றம். இன்றுமாலையும் நகரமண்டபத்தில் இந்த நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

கிளிநொச்சியில்

## படித்த இளைஞர்களுக்கு காணி வழங்கப்பட்டது

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியில் புதிதாக நிறுவப்பட்ட காணிக் கந்தோரை வடபகுதி மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் நேற்று திறந்து வைத்தார்.

படித்த வாலிபர்களுக்கு காணி கொடுக்கும் திட்டத்தில் 100 இளைஞர்களுக்கு திருவுளச் சீட்டுமூலம் காணி வழங்கும் வேலையை உதவி அரசாங்க அதிபர் ஆரம்பித்துவைத்தார்.

படித்த வாலிபர்களுக்கு கிளிநொச்சி தொகுதியில் காணி வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இத்திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

## மேலதிக பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி

தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டையொட்டி, 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் நள்ளிரவு வரை பஸ்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன மகாநாட்டின் இறுதி நாளான 9-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து எல்லா இடங்களுக்கும், மேலதிக பஸ்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. வவனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விசேஷ பஸ்சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## மாவிட்டபுரம் கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் 16-ம் நாள் உற்சவத்தில் அன்றிரவு முத்தமிழ்ச் செல்வி ராதாசோமசுந்தரம் 'வள்ளி திருமணம்' என்ற பொருள்பற்றி சங்கீதகதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

மட்டக்களப்பு

## விமான நிலையத்தில் சேவையில்லை

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு விமான நிலையத்தில் கடந்த 6 மாத காலமாக எவ்வித போக்குவரத்தும் நடைபெறவில்லை. இந்த விமான நிலையத்தில் விமானம் வந்திறங்கிச் செல்லும் பாதை பழுதுபார்ப்பதற்காக சென்ற பெப்ரவரி மாதத்திலிருந்து போக்குவரத்துச்சேவை நிறுத்தப் பட்டிருந்தது. இந்த வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப் படாதாலேயே இவ்விதநிலை ஏற்பட்டுள்ளது.

## மருந்து இல்லை

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளருக்குரிய முக்கிய மருந்துகள் இல்லை இங்கு வரும் நோயாளர் இதனால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

## விளம்பரம்

### சங்கானைப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

மேற்படி பட்டினசபையாரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் மேற்படி காரியாலயத்தில் 25-8-66 பகல் 12 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 50/- கட்டியதன்பேரில் வழங்கப்படும். கேள்விப்பத்திர விலையாக ரூபா 5/- கட்டி 22-8-66 ம் திகதி பகல் 12 மணி வரையும் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபைக் காரியாலய வேலைநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்,

1. மண்டியக்குள ஒழுங்கை
2. பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை.
3. மீன்சந்தை ஒழுங்கை.
4. விக்கினேஸ்வர வித்தியாசாலை ஒழுங்கை,
5. ஒடக்கரை ஒழுங்கை.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.
பட்டினசபைக் காரியாலயம்
சங்கானை 5-8-66. 910

### கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை கார்த்திகை 1966

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடம்இருந்து 10-9-66 க்கு முன்பாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 25-8-66 க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

1967-ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள் புத்தகங்கள் ஆகியன பற்றிய கருத்துக்களை 31-8-66-க்கு முன் தெரிவிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

சொ. பாலகிருஷ்ணன்,
கௌரவ காரியதரிசி,
வ. மா. ஆ. ச.
பரீட்சைக் குழு.
லோட்டன் வீதி,
மானிப்பாய்,
- 8-66. 911

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் ...
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு மந்திரி சபைமீது

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் 56-130 வாக்குகளால் தோல்வி

## எதிர்க்கட்சி முற்றாக வாக்களித்தது

சென்னை, ஆகஸ்ட் 6

தமிழ்நாட்டு மந்திரிசபைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் சாதகமாக 56 வாக்குகளையும், பாதகமாக 130 வாக்குகளையும் பெற்றுத் தோல்வியுற்றது. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

எதிர்க்கட்சி (தி மு க) தலைவர் திரு. நெடுஞ்செழியனால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம் சம்பந்தமாக 3 நாள் விவாதம் நடைபெற்றது.

விவாத இறுதியில் முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் பேசுகையில், கல்லூரிகளில் நியமனங்கள், மாணவர் அனுமதி ஆகிய விஷயங்களில் சலுகை, லஞ்ச ஊழல் காணப்படுவதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துரைத்தார்.

ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஒரு கூட்டுமொழியாக நீடிக்கப்படவேண்டும் என்ற உத்தியோக மொழி மசோதாவை, அரசாங்கம் பற்றி நிற்கிறது என்றும் அவர் கூறினார். ஹிந்தியைப் புகுத்தும் முயற்சியைத் தடுக்க மசோதாவில் ஹிந்திபேசாத மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக பிரவேசத்திற்கு முந்திய பாடங்களில் இவ்வாண்டு 2700 ஆண்களும், 600 பெண்களும் தமிழ் சோதனையை பெற்றிருப்பதொன்றே அரசாங்கத்தின் தமிழைப் பரப்பும் முயற்சிக்கு ஒரு சான்ற என்றும் அவர் கூறினார்.

திரு. மு கருணாநிதி (தி மு க) பேசுகையில், காங்கிரசின் ஆதரவாளராக இருந்த பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர்கூட பக்தவத்சலம் விலகவேண்டும் எனக் கூறியிருக்கிறார் எனக் குறிப்பிட்டார்

''பிரதம மந்திரி கேரளத்துக்கு விஜயம் செய்தபோது கறுப்புக்கொடிகள் காட்ட அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் கறுப்புக்கொடி காட்டுவதைத் தடுக்கும்பொருட்டு 1400 அரசியல் ஊழியர்களை பக்தவத்சலம் கைதுசெய்தார். பிரதமர்கூட இந்த நடவடிக்கையை விரும்பவில்லை. ஆனால் எனக்கெதிராக காங்கிரஸ் அங்கத்தினர்கள் கறுப்புக்கொடி காட்டுவதை பொலிஸார் தடைசெய்யவில்லை.

'திமுகவின் கட்டுப்பாட்டிலுள்ள மாநகரசபைகள் விஷயத்தில் அரசாங்கம் தீவிரமாகக் குறுக்கிடு செய்துவருகிறது. ஆனால் மோசமான நிர்வாகத்தில் இருக்கும் காங்கிரஸ் ஸ்தல ஸ்தாபனங்களில் இவ்வித குறுக்கீடு கிடையாது'' என்றும் கருணாநிதி சாடினார்.

(பி டி ஐ)

---

வியட்னும்

# கண்காணிப்பு கமிஷனை பலப்படுத்தும் இந்திய யோசனை

## அமெரிக்கா வரவேற்பு

வாஷிங்டன், ஆக 6

வியட்னுமில் சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனைப்பலப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் யோசனையை அமெரிக்காவும், கனடாவும் வரவேற்றிருக்கின்றன.

கமிஷன், ராணுவ இயக்கப்பகுதிக்குச்சென்று அங்கு துருப்புக்கள் இல்லாமல் செய்தால் அமெரிக்கா இப்பகுதியில் குண்டு வீச்சை நிறுத்தும் என வெளி நாட்டுமந்திரி ரஸ்க் நேற்று நிருபர்களிடம் கூறினர்.

இந்தியாவில் சர்வதேச கண்காணிப்புகமிஷன் இன்று கூடி, கூட்டுக்கமிஷன் அமைப்பது பற்றி பரிசீலிக்கிறது. ஜெனிவா ஒப்பந்தத்தின் கீழ் கூட்டுக் கமிஷன் ஏற்கனவே இருந்த போதிலும் கடந்த 10 ஆண்டுகளாக அது செயல்படவில்லை. இதை மீண்டும் அமைப்பது குறித்து இன்று பரிசீலிக்கப்படும்.

ராணுவ இயக்கப் பகுதி நாடு நிலைமையாக்கப்படுவதை அமெரிக்கா ஆதரிக்கிறது என திரு. ரஸ்க கூறினர்

இதற்கிடையில் ஹைபாங் துறைமுகத்தில் அமெரிக்க குண்டு வீச்சனல் ரஷ்யக்கப்பல்களுக்குஏற்படும்அபாயம் சம்பந்தமாக சோவியத் அரசாங்கம் அனுப்பிய ஆட்சேபக்குறிப்பை ஏற்க அமெரிக்க தூதராலயம் மறுத்து விட்டது. இந்தக்குறிப்பு ரஷ்ய வெளிவிவகாரக் காரியாலயத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

அமெரிக்க கனரக விமானங்கள் நேற்று தென்வியட்னும் - வடவியட்னும் இரண்டுக்கும் இடையே கம்போடிய எல்லைகருகில் குண்டு வீசின. 3 விமானங்கள் சுட்டு விழ்த்தப்பட்டன.

வியட்னும் சம்பந்தமாக ஆசிய சமாதான மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற தாய்லந்து வெளி மந்திரியின் யோசனையையும் ரஸ்க் வரவேற்றார்.

---

### சுப்ரமண்யம் மீது 'புகார்'?

புதுடில்லி, ஆக. 6

திரு. சுப்ரமண்யம், 1963-ம் ஆண்டு எஃகு மந்திரியாக இருந்தபோது கம்பெனிகள் குழு சம்பந்தமான உத்தரவு ஒன்றைத் திருத்தியது குறித்து கணக்குக்கமிட்டி மீண்டும் குறிப்பிட்டிருக்கிறது.

மந்திரி இந்த உத்தரவை மாற்றியதற்கான சூழ்நிலை இன்னும் புரியவில்லை என நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கமிட்டியின் புதிய அறிக்கை கூறியது.

### 'பீடிள்ஸ்'

லண்டன், ஆக. 6

பிரபல பிரிட்டிஷ் பீடில்ஸ் நால்வரும் திட்டமிட்டபடி, இம்மாத பிற்பகுதியில் அமெரிக்கா செல்வார்கள் என அறிவிக்கப்பட்டது.

---

# யுதாண்ட் பதவியில் நீடிக்க 36 நாடுகள் வற்புறுத்து

## மாதக் கடைசியில் தான் முடிவு அறிவிக்கப்படும்

### வல்லரசுகள் ஆதரவு



நியூயோர்க், ஆகஸ்ட் 6

36 ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று நியூயோர்க்கில் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டைச் சந்தித்து, அவர் அடுத்த முறையும் தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டனர்.

மாதக்கடைசியில் தமது முடிவை யுதாண்ட் அறிவிப்பார் எனக் கூறப்படுகிறது. வருகிற நவம்பர் மாதம் யுதாண்டின் பதவிக்காலம் முடிவடைகிறது.

ஏற்கனவே ரஷ்யா உட்பட வல்லரசுகள் அனைத்தும் யுதாண்ட் பதவியில் தொடரவேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளன.

யுதாண்ட் தொடர்ந்து போட்டியிடுவது பற்றி ஒரு ஆபிரிக்கப் பிரதிநிதி சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

---

# தமிழ் நாட்டுச் செய்திகள்

### சாம்பாருக்கு விலையா?

'இட்லிக்கு ஊற்றும் சாம்பாருக்கு விலை வைக்கும்படி ஹோட்டல் அதிபர்களுக்கு முதல் மந்திரி யோசனை கூறுவது சரியா என தமிழ் நாட்டு சட்டசபையில் புலவர் கோவிந்தன் (தி. மு. க.) கேட்டார். ''தமிழ்நாட்டு மந்திரிகளுக்குக் துணிச்சல் போதாது. உருட்டலையும் மிரட்டலையும் எங்களிடம் தான் காட்டுவார்கள். வடக்கே போய்விட்டால் கைகட்டி மெளனம் ஆகிவிடுகிறார்கள்'' என்றும் அவர் கூறினர்.

ஃ ஃ ஃ

### திருவுளச்சீட்டு

''சீட்டுக் குலுக்கிப் போட்டு தேர்தல் நடத்தலாம். பரமக்குடி மக்களுக்கு எனது யோசனை இதுதான்'' என ஜெயப்பிரகாஷ் பரமக்குடி நகரசபை வரவேற்பில் பேசும்போது கூறினர்.

ஃ ஃ ஃ

### ஊழல் கடைகள்

அரிசி விற்பனையில் ஊழல் நடந்ததாக மதுரையில் 40 நியாயவிலைக் கடைகளின் லைசன்ஸ்கள் ரத்துச் செய்யப்பட்டன.

ஃ ஃ ஃ

### நகரசபைக்கு அதிகாரம்

நகரசபைகளுக்கு அதிக அதிகாரம் அளிக்கும் மசோதா தமிழ்நாடு சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

### மந்திரி செல்வதா?

காமராஜருடன் மந்திரி வெங்கட்ராமன்ரஷ்யாசென்றது தவறு என தமிழ் நாட்டு சட்டசபையில் சுதந்திரக்கட்சித் தலைவர் சா. கணேசன் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

### திருக்குறள்

ஒருமைப்பாடு உணர்ச்சி வளரவேண்டுமானல் திருக்குறளை தேசிய நூலாக்க வேண்டும் என குன்றக்குடி மடாதிபதி தஞ்சையில் கூறினர்.

ஃ ஃ ஃ

### அப்துல்லாவை விடு

அயல்நாடுகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் காஷ்மீர் பள்ளத்தாக்கு பிளவுபடுவதைத் தடுக்க ஷேக் அப்துல்லாவை உடன் விடுதலை செய்யுமாறு ராஜாஜி கூறினர்.

### பசு வதை தடுப்பு இல்லை

சென்னை ராஜ்யத்தில் பசு வதையைத் தடுப்பதற்கான சட்டம் கொண்டு வரும் யோசனை இல்லை என மந்திரி சக்கன் கூறினர்.

---

### பங்களூரில் நாய்க்

பங்களூர், ஆக. 6

மைசூர்-மகாராஷ்டிரா எல்லைப் பிரச்னைபற்றி மைசூர் முதல்வர் திரு. நிஜலிங்கப்பாவுடன் பேச்சு நடத்தும்பொருட்டு, மகாராஷ்டிர முதல்வர் திரு. நாய்க் பங்களூர் வந்திருக்கிறார்.

### ஒரிஸாவில் 2 பல்கலைக்கழகங்கள்

புவனேஸ்வரம், ஆக. 6

வருகிற ஜனவரி 1-ம் திகதி ஒரிஸாவில் இரு புதிய பல்கலைக்கழகங்கள் செயல்பட ஆரம்பிக்கும் என அறிவிக்கப்படுகிறது.

---

### உலக மார்க்கெட்டில் இந்திய எஃகு

புதுடில்லி, ஆக. 6

இந்தியா, ரூபாய் மதிப்பைக் குறைத்தபின்பு உலக மார்க்கெட்டில் இந்திய எஃகின் விலை, இதர நாடுகளுடன் போட்டியிடும் அளவுக்குக் குறைந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

### காமராஜர்

புக்காரஸ்ட், ஆக. 6

காங்கிரஸ் தலைவர் காமராஜ் நேற்று ஹங்கேரிய பிரதமரைச் சந்தித்துப்பேசினர். ஹங்கேரியில் 3 தினங்கள் தங்குகிறார்.

---

### இந்திரா விருப்பம்

புதுடில்லி, ஆக. 6

பாகிஸ்தானுடன் நெருங்கிய நட்புறவை வளர்க்க விரும்புவதாக பிரதமர் இந்திரா இங்கு நடைபெற்ற ஹஸ்ரத் நிஸாமியா ஔலுதீன் ஞாபகார்த்தக் கூட்டத்தில் கூறினர்.

---

### பதுக்கல்காரர் கைதாகினர்

புதுடில்லி, ஆக. 6

இம்மாதம் முதல் 4 தினங்களில் குஜராத்தில் 62 பதுக்கல் வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர். ஜயப்பூரில் மூவர் கைதாயினர்.

### அப்துல்லாவை சந்தித்தார்

கொடைக்கானல், ஆக. 6

சர்வோதயத் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் நேற்று கோடைக்கானலில் திரு. ஷேக் அப்துல்லாவைச் சந்தித்துப் பேசினர். இரண்டரை மணி நேரம் பேச்சுக்கள் நடைபெற்றன. இன்று மீண்டும் ஷேக்கைத் தாம சந்திக்கப் போவதாய் திரு. நாராயண் தெரிவித்தார்.

### அயூப் மறுப்பு

ராவல்பிண்டி, ஆக. 6

மீஸோக்களுக்கு பாகிஸ்தான் உதவியளிக்கிறது என்ற இந்தியாவின் குற்றச்சாட்டை ஜனதிபதி அயூப்கான் மறுத்திருக்கிறார்.

---

### பதவிநீக்கம்

பீகிங், ஆகஸ்ட் 5

சீனவில் களைபெடுப்பைத் தொடர்ந்து வூஹான் பல்கலைக்கழகத் தலைவரும், பிரபல பழம்பெரும் தலைவருமான லிடே பதவிநீக்கம் பெற்றார். இவருக்கு வயது 77. பீகிங், நான்கிங் பல்கலைக்கழகத் தலைவர்களும் முன்பு பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# நீக்ரோ தலைவர் கிங் தாக்கப்பட்டார்!

சிக்காகோ, ஆக 6

நீக்ரோ தலைவர் திரு மார்ட்டின் லூதர் கிங் நேற்று சிக்காகோவில் தாக்கப்பட்டார்.

600 சிவில் உரிமை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது அவர்கள்மீது வெள்ளையர்கள் கற்களை எறிந்தனர்.

திரு. கிங்கின் தலையில் ஒரு கல் விழுந்தது. இதனல் அவருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

சிக்காகோவில் வீடுகள் வாங்குவதில் மேற்கொள்ளப்படும் இனப் பாரபட்சத்தைதொடர்ந்து நீக்ரோ சிவில் உரிமை இயக்கம் நடைபெறுகிறது

நேற்றைய சம்பவத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டார். மேலும் பலர் காயமடைந்தனர். பலர் கைதுசெய்யப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வ அனுபூதி பெற்றவர்களுக்கு யார்மீதும் வெறுப்பு இராது. அவர்களுக்கு நாளையைப் பற்றி கவலையோ விசாரமோ இல்லை. ஞானிகள் குழந்தை உள்ளம் படைத்தவர்கள். மலையளவு பொறுமை உள்ளவர்கள். யாராவது திட்டினாலும் பதிலுக்குத் திட்டமாட்டார்கள்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 22 உ (7-8-66)


## கைத்தொழில் விருத்தி

வெளி நாடுகளிலிருந்து அதிகமான அளவு மூலப் பொருட்களை இறக்குமதி செய்து அவற்றைக் கொண்டு இங்கு பொருள்களை உற்பத்திசெய்யும் நோக்கத்துடன் தனிப்பட்டவர் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஊக்கமளிப்பதில்லையென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது இந்த நல்ல தீர்மானத்தை அனைவரும் நிச்சயம் பாராட்டுவர்.

நமது தேவைகளுக்கு வெளிநாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் துர்ப்பாக்கியநிலை நீங்கவேண்டும். உணவு மற்றும் நமது அத்தியாவசிய தேவைகளுக்கு, நாம் அரசியல் சுதந்திரம்பெற்றுப் பதினெட்டு ஆண்டுகளாகிவிட்ட போதிலும் இன்னமும் வெளிநாடுகளையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். உணவிலும் மற்றும் பொருள்களிலும் நாம் தன்னிறைவு பெறக்கூடிய நிலை ஏற்படாதவரை, நாம் பொருளாதார சுதந்திரமடையமுடியாது; கிடைத்த அரசியல் சுதந்திரத்தையும் பாதுகாக்கமுடியாதுபோய்விடும். உணவு உற்பத்தியைப் பெருக்கவும் கைத்தொழில்களை விருத்திசெய்யவும் முன்னைய அரசாங்கங்களும் திட்டமிட்டன; முயற்சியும்செய்தன. ஆனால்நமது நாட்டின் தேவைகளுக்கேற்பவும், நமது நாட்டிலுள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தவும் கூடிய முறையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் வகுக்கப்படவில்லை. இதன் விளைவாக இனிப்புத் தொழிற்சாலைகள், உடைகள் தயாரிக்கும் நிலையங்களுமே அதிகரித்தன.

நமது நாட்டில் மூலப்பொருள்களுக்குக் குறைவில்லை; ஆட்பலத்துக்கும் குறைவில்லை. ஆனால் அவற்றைச் சரிவாகப் பயன்படுத்த ஒழுங்கான முறையில் திட்டமிடப்படவுமில்லை; செயல்படுத்தவுமில்லை.

திட்ட அபிவிருத்தி இலாகாவும், கைத்தொழில் அமைச்சும் நமது நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பற்றியும் அவற்றை உற்பத்திசெய்வதற்கு இங்குள்ள மூல வளங்களைப் பற்றியும் கணக்கெடுத்து அதற்கேற்ப ஒருமுகமான திட்டம் வகுக்கவேண்டும். இதற்கமைய தனியார் துறையினர் கைத்தொழில்களைத் தொடங்க அனுமதி வழங்கப்படவேண்டும். நமது தேவைக்குரிய பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும், தனியார் துறைக்கு ஊக்கமளிக்கப்படவேண்டியது அவசியம். ஆனால் வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்களை இறக்குமதிசெய்வதால் நாம் எதிர்பார்க்கும் பயன் கிடைக்காது.

இதேசமயம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை இங்கு உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பும் வசதியும் இருக்குமானால் அதற்கு வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு விதிவிலக்களிக்கலாம்.

## தோட்டப் பகுதியில் மற்றொரு அநியாயம்!

தோட்டப் பகுதிகளில் பிரசவத் தாய்மார் மரணம் கவலையளிக்கக்கூடிய முறையில் அதிகரித்துவருவதாகவும் இதற்கு மருத்துவத் தாதிகளின் பற்றாக்குறையே காரணமென்றும் தோட்டத் துரைமாரின் தோட்ட சுகாதாரத் திட்ட வைத்திய அதிகாரியின் 1964-ம் வருட ஆண்டறிக்கை கூறுகிறது.

கர்ப்பிணிகளின் மரணம் மட்டுமல்ல சிசுமரணமும் தோட்டப்பகுதிகளில் அதிகரித்துள்ளதாகக் கூறும் வைத்திய அதிகாரியின் அறிக்கை, இதற்குத் தெரிவிக்கும் காரணங்கள் வேதனையளிப்பதாக இருக்கிறது. பிரசவத் தாய்மார்களைக் கவனிக்கவேண்டிய மருத்துவத்தாதிகளைக் கவனிப்பதற்கே தனியாக ஒரு விடுதி கட்டவேண்டும் போல் தோன்றுகிறது. சுகாதார இலாகாவில் சேவை புரிந்து ஓய்வு பெற்றவர்களே தோட்டங்களில் சேவை புரியும் மருத்துவத் தாதிகளாம். இவர்கள் எப்படிச் 'சேவை' செய்யமுடியும்? சிசுமரணம் அதிகரித்துள்ளதற்கு பிரசவத்திற்கு முன் தாய்மார் போஷாக்குள்ள உணவு உட்கொள்ளாததே காரணமாம்.

இவை தவிர சுகாதாரம் பற்றிய கல்வி போதனை இல்லை. அப்போதிக்கரிமார், மருந்து கலப்போர் பற்றாக்குறை, மருத்துவத் தாதிகளுக்கும், கங்காணிகளுக்கும், தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தொடர்பு குறைவு. இவைகளெல்லாம்தான் தோட்டப்பகுதிகளில் வருங்கால சந்ததிகளையே அழித்துவருகின்றன.

தோட்டத் தொழிலாளர்தான் இந்நாட்டின் வருமானத்துக்கு முக்கியமாக விளங்குபவர்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கை நிலையோ அவர்களை மனிதர்களாக மட்டுமல்ல ஜீவன்களாகக்கூடக் கணிக்கவில்லை. சமதர்மம். சமத்துவம், மனித உரிமைபற்றியெல்லாம் பேசப்படும் இந்த நாளிலும் இதே நிலையா? தோட்டப்பகுதி மக்களின் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் இனியும் கண்மூடிக்கொண்டிருப்பது மன்னிக்கக்கூடியதல்ல.

தோட்டத் தலைவர்கள், எம். பி.க்கள் உடனடியாக இக்குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தோட்டப்பகுதி மக்களின் கல்வி, சுகாதார நிலைமையை சீர்திருத்த அரசாங்கம் வெளிநாடுகளிடம் கடனுதவியோ, நிதிஉதவியோ கோர வேண்டிய அவசியமில்லை. ஒரு இறாத்தல் தேயிலைக்கு ஒரு சதம்வரி விதித்தாலே தோட்டப்பகுதிமக்களின் வாழ்வு வளம்பெற்றுவிடும்.

# தமிழ்காங்கிரஸின் சாதனைகள்

— தா. சங்கரப்பிள்ளை —

(இணைக்காரியதரிசி, தமிழ் காங்கிரஸ்)

இன்று ஆரம்பமாகும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் 21-வது மகாநாட்டில், அதன் இணைச்செயலாளர்களில் ஒருவரான திரு. தா. சங்கரப்பிள்ளை சமர்ப்பிக்கவிருக்கும் ஆண்டறிக்கையில் தமிழ்க்காங்கிரஸ் சென்ற ஒரு வருடத்தில் ஈட்டிய சாதனைகள் சுருக்கமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை இங்கு காணலாம்.



அரசியல் கருமங்களும், எதிர்பார்த்தது போல் ஒழுங்கு முறையிலும் நடைமுறையிலும் அமைவதும் அமைப்பதும் அபூர்வம். அப்படி அமையுமானால் அவ்வமைப்பு ஓர் தனிப் பெரும் பேறு. அத்தகைய ஒரு பேறுதற்கரிய பேறை அடைந்திருக்கின்றது எமது காங்கிரஸ். கடந்த ஒரு வருட காலத்தில் நாமடைதல் நன்மைகளையும் பலாபலன்களையும் நினைவு கூருவாம்.

எமது கட்சியின் கொள்கைகள் இயன்றளவுக்கு நாம் எண்ணியபடி அனுசரிக்கப்பட்டு வருகின்றது. ஒற்றை ஆட்சியும் இனப்பிரிவற்ற தேசிய ஒற்றுமையும்தான் நம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மார்க்கம் என்று கூறிவந்தோம். இந்த இலட்சியம் அனுபவ அனுசரணை பெற்று 1965 பங்குனி மாதத்தில் உருவான அரசாங்கம் நாம் எதிர்பார்த்த அளவுக்கு மொழியுரிமையை வழங்காவிட்டாலும்சீர்கேடான நிலைமையை ஓரளவுக்குத்தணித்திருக்கின்றது. நாம் விரும்பியதுபோல் நீதியான முறையில் மொழியுரிமை தீர்க்கப்படவில்லை. ஆனால் தேசிய ஒற்றுமைவழியால் எம்மை துரிதமாகவும் விரைவாகவும் தாக்கிக்கொண்ட இன அழிவும் மொழியழிவும் ஓரளவுக்கு நிறுத்தப்பட்டு சமாதான நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒற்றை ஆட்சித் தேசிய ஒற்றுமையை எமது கொள்கைகளை எதிர்த்தவர்களும் ஏற்றுக்கொண்டனர். கையாண்டுள்ளனர். இதுவே எமது கட்சியின் அரசியல் பொருட்பேறு இது எமது கட்சிக்கும் எமது அரசியல் பண்டித்தியமும் அனுபவச் செல்வமும் நிறைந்த எங்கள் தலைவருக்கும் மாபெரும் பரிசு.

### சர்வகட்சிகளின் சம்மதம் தேவை

இவ்வாறு ஆட்சியிலிருக்கும் ஒரு பெரும்பான்மைக் கட்சியுடன் ஒற்றுமைப்பட்டு ஒரு கோளாறை அப்பாதைக்கான வழியில் தீர்த்துக்கொள்ள முடியுமானால் சர்வகட்சிகளின் சர்வசம்மதம் பெற்ற ஒரு திட்டத்தினால் எக்காலமும் அழியாத ஓர் தீர்வு காண முடியும் என்ற உண்மைக்கு ஆதாரமாக அமைகின்றது. அப்போதைக்கான வைத்தியத்தினால் நோயை அறவே ஒழிக்க முடியாது. நிரந்தரமான தீர்வுதான் நிலைநிற்கும். எமது கட்சி இன்னும் இக்கொள்கையை இறுகத் தழுவிக்கொண்டுதான் இருக்கின்றது. தகுந்த நிலைமையும் சூழ்நிலையும் ஏற்படும் காலத்தில் எமது கட்சி இவற்றையும் சாதித்து எமது உரிமைகளைப் பெற்றுத் தரும்.

அரசாங்கத்திடம் எத்தனையோ பாரதூரமான கோரிக்கைகள் விடுத்திருந்தோம். அவைகளில் காங்கேசன்துறை துறைமுக வேலையும் மகாவலிகங்கை நீரை மறித்துக் கட்டும் வேலையும் முக்கியமானவை. இவைகளைச் செய்து முடிக்க அரசாங்கம் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திற்கு வீட்டுத் திட்டங்கள் கேட்டோம் அவைகளும் எங்களுக்கு வழங்கப் பட்டிருக் கின்றன். தொழில் வாய்ப்பு வசதிகளை அதிகரிக்கும்படி கேட்டிருக்கின்றோம். அடுத்த வருடங்களில் அரசாங்கம் வகுத்திருக்கும் திட்டங்கள் அமுலுக்கு வரும்போது வேலை வாய்ப்புக்கள் எமக்குக் கிடைக்கும்.

இலங்கை அரசியல் திட்டம் மாற்றியமைக்கும் போது அடிப்படையுரிமைகளைக்கொண்ட அத்தியாயம் ஒன்று இடம்பெற வேண்டுமென்ற எமது கோரிக்கை உரிய காலத்தில் கையாளப்படுமென்று உறுதியாயிருக்கின்றோம்.

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருடைய கோரிக்கைகள் கவனிக்கப்படுமுகமாக அரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கின்றது.

இந்தியப் பிரஜாஉரிமையைப்பற்றியும் அரசாங்கம் ஆறுதலான முறையில் நடுநீதியான நடவடிக்கைகளை கையாளுமென எதிர்பார்க்கின்றோம்.

மீன்பிடித் துறைமுகங்களைச் சீர்படுத்தவும் அரசாங்கம் ஏற்ற நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. தற்போது பேராதனையிலுள்ள தேசிய பல்கலைக் கழகத்தின் தமிழ்பேசும் உரிமை பறிபோகாதபடி அல்லது பாதிக்காத வகையில் வடபகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவக்கேட்டிருந்தோம். இலகுவான முறையில் பெறலாமென நினைத்து ஒரு இந்துப் பல்கலைக்கழகத்தைக் கேட்டு வருகின்றோம். அதைத்தருவதற்கு அரசாங்கம் முயற்சித்துவருகின்றது. ஆனால் கட்சி வளர்ச்சியை முன்வைத்து சில தமிழ்ப் பிரதிநிதிகள் இதை எதிர்க்கின்றார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

கதிர்காமம் சேரும்போது பகல் 2 மணிக்கு மேலாகிவிட்டது. இடையிலே இளநீர் கிடைத்தது. சுவாமி 'சாப்பிட்டாச்சா' என்று கேட்டதும், உடன் 'ஆச்சு' என்றுவிட்டேன். பசி சற்றே கிள்ளியது என்றாலும் உபவாசம் இருக்கலாமென்று நினைத்து, செல்லக் கதிர்காமத்துக்கு ஸ்நானம் செய்யச் சென்றேன். அடிக்கடி பஸ் ஓடுகிறது. அங்கு ஸ்நானம் வெகு சுகம். பஸ்ஸில் வந்த அலுப்பெல்லாம் தீர்ந்தது.

அங்கு கோவிலில் பெருங் கூட்டம். யாரையும் தெரியாது. முதலில் போகவேண்டாமென்று தான் நினைத்தேன். பின்னர் ஏதோ என்னை அங்கு இழுத்துச் சென்றது. யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவர் அன்பைச் சொரிந்தார் வேண்டாமென்றாலும் விடவில்லை. கப்பல் பழம், பிஸ்கெட், பால் எல்லாம் கொடுத்தார். ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து...'' என்ற திருவாசகம் தான் நினைவுவந்தது. நம் மீது இறைவனுக்குத் தான் எவ்வளவு கருணை!

ஃ ஃ ஃ

அப்பாசாமி மடத்துக்குத் தான் இம்முறைமனம் இழுத்தது அங்கு சுவாமி கிருஷ்ணானந்தா எனும் சண்முகவடிவேலு அச்சமயம் கந்தபுராணத்தை மற்றோர் அன்பருடன் படித்துக்கொண்டிருந்தார். கேட்க வேறு யாருமில்லை. யாரும் இல்லாவிடினும் படிக்க வேண்டுமென்றும், கந்தபுராணம் வாசிப்பதால் அங்கு முருகன் அருள் சுரக்குமென்றும் கொழும்புத்துறை முனிவரின் கட்டளையாம். நாம் திருந்தத் திருந்த உலகமும் திருந்துமல்லவா?

அங்கு மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு இளம் பௌத்த துறவி வந்திருந்தார். ஜெர்மனியில் இவ்விதம் அன்னதானங்கள் நடப்பதுண்டா என்று கேட்டேன். அங்கு ஏழ்மை இவ்வளவு கிடையாதென்றும் அதனால் அன்னதானத்துக்கு அவசியமில்லை என்றும் சமாதானம் சொன்னார்! ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் போய் சாப்பிடுபவர்கள் எல்லாரும் ஏழைகளோ, பிச்சைக்காரரோ அல்லவென்றும் மக்களின் பசியாற்றும் புனிதப்பணி நமது பண்பென்றும், தானத்தில் சிறந்தது அன்னதானமென்றும், அது கடவுள் பிரசாதமேயன்றி வெறும் உணவல்லவென்றும், சாப்பிடுகிறவர்களை எல்லாம் இறைவடிவங்களாகக் கருதி அவர்களுக்கு 'மகேச்வர பூசை' செய்வதாகவும் விளக்கினேன். அவரது தப்பெண்ணம் ஓரளவு நீங்கி இருக்குமென்றே நினைக்கிறேன்.

ஃ ஃ ஃ

அடே யப்பா! எவ்வளவு காவடிகள்! காலை முதல் இரவு வெகுநேரம்வரை குடும்பம் குடும்பமாக வந்து காவடி எடுக்கிறார்கள். சிங்களவர்தான் அதிகம். நேர்த்திக் கடன் போலும். ஆண்கள். பெண்கள் குழந்தைகள் எல்லோருமேகாவடி ஆட்டம் மெய்மறந்து ஆடுகின்றனர். அதற்கு கொட்டு மேளம் டப்பா சங்கீதம் தான். 'பைலா' மெட்டு கேட்டுக் கேட்டு புளித்துவிட்டது. காவடியின் தத்துவம் அவர்களுக்குத் தெரியுமா என்பது சந்தேகம். மூடபக்தி தான் அதிகம்.

முருகா! தத்துவத்தையும், காவடிச்சிந்து மெட்டில் பாடல்களையும் சிங்களத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசு

# வாலிபமுன்னணி மகாநாட்டில் தமிழகப் பேச்சாளர்கள்

## நாளை செயற்குழு கூடுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசியல் மகாநாடு, இலக்கிய மகாநாடு, தொழிலாளர் மகாநாடு என்று மூன்று பிரிவுகளாக நடைபெற விருக்கும் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி மகாநாட்டில் தமிழகத்திலிருந்தும், ஈழத்திலிருந்தும் பல பேச்சாளர்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

### நாளை கூடுகிறது

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் பதினோராவது தேசிய மகாநாடு இம்மாதம் 21, 22, 23ந் தேதிகளில் மாவிட்டபுரத்தில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டு ஒழுங்குகளைக் கவனிக்கும் பொருட்டு நாளை திங்கட்கிழமை மாவிட்டபுரத்திலுள்ள வாலிப முன்னணிக் கிளைக் காரியாலயத்தில் வாலிப முன்னணிச் செயற்குழு கூடுகிறது.

### சைக்கிள் ஊர்வலங்கள்

மகாநாட்டின் இரண்டாவது நாளன்று 22ந் தேதி பல தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் சைக்கிள் ஊர்வலமாக யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் வந்தடைந்து கே. கே. எஸ். வழியாக மாவிட்டபுரம் சென்றடையும். ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற தூர இடங்களிலிருந்தும் சைக்கிள் ஊர்வலம் வரும் என்று வாலிபமுன்னணி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வாலிப முன்னணி மகாநாட்டிற்கு, ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் பல முக்கிய பேச்சாளர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். இதன் விபரங்கள் நாளைய செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

மகாநாட்டை யொட்டி நடைபெறவிருக்கும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பரிசுகள் வழங்குவார். வாலிப முன்னணித் தலைவரும் மட்டக்களப்பு முதல் எம். பி.மான திரு. செ. இராசதுரை மாநாட்டு ஒழுங்குகளைக் கவனிக்கும்பொருட்டு யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருப்பார்.

# யாழ். மாம்பழங்களுக்கு கிராக்கி அதிகரிப்பு

## டப்பாக்களில் அடைத்து ஏற்றுமதி செய்ய திட்டம்

கொழும்பு, சனி

யாழ்ப்பாண மாம்பழங்களுக்கு கிராக்கி அதிகரித்து வருகிறது யாழ்ப்பாண மாம்பழங்களை டப்பாக்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதிசெய்வதற்கு ஐந்து பெரும் வர்த்தக ஸ்தாபனங்க ஆயத்தங்கள் செய்து வருகின்றன

ஏற்றுமதிக்காகவே பழங்களை உற்பத்தி செய்யும் பொருட்டு பெருந்தொகையான நிலப்பரப்பில் தோட்டச் செய்கை ஆரம்பிக்கவும் இந்த ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்கின்றன பழச் செய்கைக்கென முடிக்குரிய காணியை தங்களுக்குக் குத்தகையாகத்தர வேண்டுமென அந்த ஸ்தாபனங்கள் கோருகின்றன. தங்களுக்கென வழங்கப்படும் காணியில் பழச் செய்கைக்கான விவசாயிகளை குடியேற்ற வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், புத்தளம், ஹங்குராங்கெடா, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகி இடங்களேபழச்செய்கைக்கு உகந்தவையென்றும் இந்த ஸ்தாபனங்கள் யோசனை கூறியுள்ளன.

## தமிழ் காங்கிரஸின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசாங்கத்தின் நல்லெண்ணத்தினால் எமது தலைவர் திரு. பொன்னம்பலம் ஐக்கியநாடுகள் சபைக்கு இலங்கைக் கோஷ்டித் தலைவராக எமக்குக்கிடைத்தது.

மேற்கண்டவாறு பலநன்மைகளையும் எமது கட்சி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் பணநிலை குறைந்திருக்கிறபடியால் எமது கோரிக்கைகளிற் பல உடனே கையாளப்படாதிருக்கின்றது.

எமது கட்சியும்பலதுறைகளிலும் செல்வாக்கை உழைத்துக்கொண்டிருக்கின்றது. தொழிற்சங்கங்களின் ஆதரவைப் பெற்று ஏறக்குறைய இருபத்தையாயிரம் தொழிலாளருக்கும் பொறுப்பான சங்கங்களின் சம்மேளனத்தை உருவாக்கியிருக்கின்றது. இதன்விளைவாக எமது கட்சி முதன்முதலாக மேதினத்தைக் கொண்டாடியது. கடந்த ஆண்டில் ஏறக்குறை ஏழு மந்திரிமார்களை நமது நாட்டுக்கு வரவழைத்து இங்குள்ள குறைகளை எடுத்துக்காட்டியிருக்கின்றோம்.

காங்கிரஸ் நிர்வாகமும் சிறப்புற்று வளர்ந்துகொண்டிருக்கின்றது. மாதம் எழுநூற்றைம்பது ரூபா செலவில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நிரந்தரமான காரியாலயங்கள் திறுவி உத்தியோகத்தரையமைத்து எங்கள் கட்சிஅலுவல்களை நடாத்திவருகின்றோம்.

## "ஆசிரியர்களை நியமிக்குக'

### பெற்றோர் சங்கக் கோரிக்கை

சுழிபுரம், சனி

சித்தங்கேணி கணேச வித்தியாசாலையில் ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் கல்வி அமைச்சருக்கு மகஜரொன்று அனுப்பி வைத்துள்ளனர்.

பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக் குறையினால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு சங்கம் கோருகின்றது பாடசாலைக்குத் தேவையான கட்டிட வசதிகள் இல்லாததால் மாணவர்கள் வசதியாக இருந்து கல்வி கற்க முடியாதிருக்கிறது. கட்டிடங்களை கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று இம் மகஜரில் தெரிவித்துள்ளனர்.

## சேவை நலம் பாராட்டு

வவனியா, சனி

"தன்னலமற்ற சேவையினால்தான் ஒரு தனிமனிதனின் உயர்வு கணிக்கப்படுகிறது இப்படியாகச்சேவை மனப்பான்மைகொண்டவர்களின் மூலமே நாடும் முன்னேறுகிறது" என்று வவனியா விவசாய காரியாலயத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. ஏ துரைசாமிக்கு நேற்று முன்தினம் அளிக்கப்பட்டபாராட்டுவிழாவில் திரு நடேசன் பேசுகையில் கூறினார்.

இவரது சேவையைப் பாராட்டி திருவாளர்கள் பி. நடராசா, ஏ. கணபதிப்பிள்ளை, சி. சிவமுத்துலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## யாருடையது?

யாழ்ப்பாணத்திலுள்ள ஜவுளிக்கடையொன்றில் தவறவிடப்பட்ட இரண்டு குடைகள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் பெற்றுக்கொள்ளலாம்,

## பூரியில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு.க.துரைரத்தினத்திடம் புகார்செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவர்களைத்தேடுவதில்கடற்படை விமானப்படையினர் ஈடுபட்டபோதிலும் எவருமே கண்டுபிடிக்கப்படவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவில் பூரி என்னுமிடத்திலுள்ள கடற்கரையில் இம்மீனவர்கள் மூவரும் மயக்கமுற்ற நிலையில் இருந்ததாக இந்திய அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து இவர்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதில் பருத்தித்துறை எம். பி. முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

## ஐயாறன்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வெளியிடுவது அவர்களுக்குச் செய்யும் நல்ல கைங்கரியமாகும். கந்தபுராணத்தையும் சிங்களத்தில் மொழிபெயர்க்க வேண்டும். இப்படி நாம் செய்யவேண்டிய பணிகள் எவ்வளவோ உண்டல்லவா? தமிழருக்கும் இது நல்லதல்லவா?

* * *

இம்முறை ஒரு புதிய காட்சியை அங்கு கண்டேன். நீண்ட நீண்ட வேலாயுதங்களை சிங்களவர் பலரும் வைத்துக்கொண்டு, சிவப்பு உடைதரித்து பக்தியுடன் பவனிவந்தார்கள். நீண்ட வேலாயுதத்தைப் பார்த்ததும் "அப்பே ஆண்டுவா" காலம்நினைப்புவந்தது! விசாரித்ததில் அப்படி எதுவுமில்லை என்றும், முருகனுக்கு உகந்த வர்ணம் சிவப்பென்றும் அதனால்தான் இவ்வித உடை தரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

* * *

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே, மூளாத் தீ போல் உள்ளே கனன்று முகத்தான் மிக வாடி, ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே.

—ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமி.

ஆசிரிய சங்க நடப்பு வருட உத்தியோகத்தர் வருமாறு: தலைவர்: திரு. வ. ஈஸ்வரம்பிள்ளை, உபதலைவர்: வே. முத்துக்குமாரு, காரியதரிசி: சி. குமாரசாமி, தனாதிகாரி: அ.மார்க்கண்டு. ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

சுளிபுரம் கொலை வழக்கு

# ஆறு எதிரிகளும் தலா ரூ. 2000 பிணையில் செல்ல அனுமதி

மாவிட்டபுரம், சனி

சுளிபுரம் கொலைவழக்கு மல்லாகம் நீதிபதி திரு டி. எஸ் நித்சிங்கா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட பொழுது டாக்டர்களின் சாட்சியத்தின் பின்னர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கிளப்பிய ஓர் பிரச்னையைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகள் ஆறுபேரையும் தலா 2000 ரூபா பிணையில்செல்ல அனுமதியளித்து மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து தங்கவேலு, வயிரமுத்து மாரிமுத்து, மாரிமுத்து கந்தசாமி, மாரிமுத்து வயிரமுத்து, தம்பையா சுப்பிரமணியம், பாலன் என்றழைக்கப்படும் விநாயகர் திரிபாலசிங்கம் ஆகிய ஆறுபேரும் அதே ஊரைச்சேர்ந்தவேலாயுதம் வயிரமுத்துவைக் கொலை செய்ததாக சுங்காகனைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானார். சுங்காகனைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு மெண்டிஸ் வழக்கை நடத்தினார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ் விக்கினராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவரை கடந்த மார்ச் மாதம் 31 ம் திகதி இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பரிசோதித்தேன், அவரின் பின்முதுகில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அவ்வெட்டினால் மூன்று விலா எலும்புகள் வெட்டப்பட்டுக் கிடந்தன. இக்காயத்தினால் அவரின் நாரிக்குக் கீழ்ப்பட்ட பகுதிகள் உணர்ச்சியற்று ஆதாவது சரிவர இயங்கவில்லை. அவரின் தலையில் ஒரு அடிகாயமும் காணப்பட்டது. காலஞ்சென்றவருக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டஅன்றிரவே சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது. அவரின் முதுகில் காணப்பட்ட வெட்டுக்காயம் வாச்சியினால் ஏற்பட்டிருக்கலாம். தலைக்காயம் இரும்புக்கம்பியால்ஏற்பட்டிருக்கலாம். இவர் ஆஸ்பத்திரியில் சென்ற யூன் மாதம் 28-ம் திகதி இறந்தார்.

யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கெபிரியல் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;-

காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அன்றிரவு 10 மணியளவில் அவருக்குச் சத்திரசிகிச்சையளித்தேன். அவரின் முதுகில் ஏற்பட்ட காயத்தினால் அவரின் விலா எலும்புகள் மூன்று வெட்டப்பட்டுக் கிடந்தன. இதனால் அவரின் நாரிக்குக் கீழ்ப்பட்ட பகுதிகள் இயங்கவில்லை. இதனால் அவர் சலம்விட முடியாத நிலையேற்பட்டு அவரின் சலப்பையில் நோய் உண்டாகி விட்டது. அத்துடன் அவர் படுத்தபடுக்கையாகமூன்றுமாதங்களாக கிடந்தமையால் அவரின் முதுகிலும் புண் உண்டாகிவிட்டது. சலப்பை புண்ணினாலும் முதுகுப் புண்ணினாலும்தான் மரணம் சம்பவித்தது. இறந்தவரின் காயங்களுக்கும் மரணத்திற்கும் தொடர்பில்லை.

இதனைத்தொடர்ந்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் நீதிபதியிடம் இவ்வழக்கில் சாட்சியம் கொடுத்த டாக்டர்களின் சாட்சியங்களின்படி எதிரிகளுக்கு எதிராக கொலைக்குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாதென்றும் இப்போது உள்ள நிலையில் எதிரிகள் காலம்சென்றவரை கொலை செய்ய முயன்றார்கள் என்றோ அல்லது காலம் சென்றவருக்குப் படுகாயம் ஏற்படுத்தினார்கள் என்றோதான் குற்றஞ் சாட்டமுடியும். இதனால் எதிரிகளை தொடர்ந்து ரிமான்டில் வைத்திருக்காமல் அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கும்படி விண்ணப்பிக்கிறேன் என்றார்

இதனை ஏற்ற நீதிபதிதலா 2000 ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்து மேல் விசாரணையை 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# கூட்டுறவு இயக்கத்தின் ஒரு சாதனைச் சின்னம்"

## கல்லுண்டாய் உப்பெடுக்கும் வைபவத்தில் உதவி ஆணையாளர்

வட்டுக்கோட்டை, சனி

"கல்லுண்டாய் உப்பளத்தில் அடுத்த வருடம் சராசரி 5000 தொன் உப்பு அறுவடை செய்ய முடியும்" என்று கல்லுண்டாய் உப்பளத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற உப்பெடுக்கும் வைபவத்தில் கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை பேசுகையில் கூறினார்.

இவ்வைபவம், கூட்டுறவு ஆணையாளர் திரு. பி. ஈ. வீரமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலிகாமம் மேற்கு கூட்டுறவு சங்க சமாஜத் தலைவர் திரு. க. கெங்காதரம்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. கே. எஸ். பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில், தற்பொழுது இந்த உப்பளத்தில் 136 பாத்திகளில் 15 ஏக்கர் உப்பு விளைந்து அறுவடைக்குத் தயாராகவிருக்கிறதென்றும் இந்த ஸ்தாபனம் கூட்டுறவு இயக்கத்தின் சாதனைச் சின்னமாக விளங்குகிறதென்றும் கூறினார்

திரு. பி. ஈ. வீரமான் பேசுகையில், வடபகுதியில் இவ்வியக்கம் வளர்ந்தமைக்குக் காரணம் தத்தம் பிரத்தியேகத் துறைகளில் வெற்றிகரமாகச் சேவை செய்து இளைப்பாறிய பிரமுகர்கள் கூட்டுச்சேர்ந்து பாடுபட்டதே என்று கூறினார்.

## மந்திரி 'திரு'வுக்கு வரவேற்பளிக்க தீர்மானம்

கல்முனை, சனி

இம்மாத நடுப்பகுதியில் கல்முனைக்கு விஜயம்செய்யவிருக்கும் ஸ்தலஸ்தாபன மந்திரி இ. எம். திருச்செல்வத்துக்கு கல்முனைப் பட்டின சபை வரவேற்பளிக்கவிருக்கிறது.

திரு. எம். தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கல்முனை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இவ்விதம் வரவேற்பளிப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

சேலத்தினை இனம் கண்டு கொண்டவுடன் அறைக்குள் சென்றான். சிந்தனையில் மூழ்கினான் இருந்தும் அவன் மனம் அமைதியடையவில்லை மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு அதை அடக்கியவாறு கட்டிலில அமர்ந்தவாறே ஓர் நாவலைப் படிக்க முயற்சித்தான். அப்பொழுது. சிறுமிசந்திரா அவனைத்தேடி வரவே, அவளிடமாவது அப்படிப் பயங்கரமாக ஓலம் எழுப்புவது யார் என அறிய முயற்சித்தான்.

"எனது அக்காவுக்குத் தான் திடும் என்று வலிப்பு வரும். அப்ப இப்படிக் கத்திக்கொண்டே மயங்கி விழுவாள்" என்றாள் சிறுமி.

பணியாள் செல்லையா மதியப் போசனத்துக்கு வருமாறு அழைத்தான். போசன அறையில் டாக்டர் இராமுவின் வருகைக்காகக் காத்திருந்தார். இராமுவும் சந்திராவும் சென்று ஆசனத்தில் அமர்ந்தவுடன், மூவரும் பரிமாறப்பட்ட போசனத்தினை உண்ணத் தொடங்கினர்.

ஒருவருடன் ஒருவர் கதைக்கவில்லை. அமைதிநிலவிற்று பயங்கர அமைதியின் நடுவில் சாப்பாடு முடிந்தது.

சற்று இளைப்பாறுங்கள் நான் வந்து உங்களை அழைத்துக்கொண்டுபோய் எனது ஆய்வுக்கூடத்தினைப் பார்க்கலாம்... என்று கூறிவிட்டு சிறுமி சந்திராவை அழைத்துக்கொண்டு சென்றார் டாக்டர். ராமுவுக்கு பலநினைவுகள் எழுந்தன.

சில நிமிடங்களில் இராமு தனது அறைக்குச்சென்று இளைப்பாறச்சென்ற சிலநிமிடங்களுக்குள், சந்திராவந்து டாக்டர் அழைப்பதாகக் கூறி இராமுவை டாக்டரின் ஆய்வுகூடத்திற்கு அழைத்துச்சென்றான். ஆய்வுகூட வாசலில் இராமுவை வரவேற்ற டாக்டர், இராமுவை தனியாக அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைந்த இராமு இதுவரையில் டாக்டரின் ஆய்வுகூடத்தினைப்போன்ற நவமான ஆய்வுகூடத்தைப் பார்க்காததினால் ஆச்சரியமடைந்தான்.

"நான் தற்சமயம் ஓர் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளேன். இறந்தவர்களின் உடல் ஏன் பழுதடைகின்றது என்பதைக்கண்டுபிடிக்கமுயற்சிக்கின்றேன்" என்றார் டாக்டர். "மிகவும் புதுமையான ஆராய்ச்சி" என்றான் இராமு. "உண்மையில் இந்த ஆராய்ச்சியில் நான் வெற்றிபெற்றுவிட்டால் இறந்தவர்களை எல்லாம் உயிர்ப்பித்துவிடலாம்..." என்றார் டாக்டர்.

தான் ஆராய்ச்சி செய்து வரும் மனிதப் பிரேதங்கள் பலவற்றை இராமுவுக்குக் காட்டி அவைபற்றித்தனது அவதானக்குறிப்புக்களை வாசித்துவிளக்கியவாறே... இந்த ஆராய்ச்சிக்கு எனக்கு நிரம்ப மனிதப் பிரேதங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் மாதத்தில் இரண்டு மூன்று தான் எனக்கு மருந்து இலாகாவினால் அனுப்பிவைக்கப்படுகின்றது...! எனக்குறைபட்டுக்கொண்டார் டாக்டர்.

அப்பொழுது ஓர் பிச்சுவா கத்தி ஆய்வுகூடத்து மேசைமேல் 'சதக்' என்ற ஓசையுடன் வெளியே இருந்து வந்து விழுந்தது.

ஒரு கனம் இருவரும் ஸ்தம்பித்துநின்றுவிட்டு, சுயநினைவுக்குவந்தவர்களாக டாக்டர் அந்தப் பிச்சுவாவை இழுத்துக்கையிலெடுத்தார் அதில் ஓர் காகிதம் செருகியிருந்தது அதைவெளியே எடுத்தபோது... அதில் டாக்டர்... 'நம்பநட... நம்பிநடவாதே...' எனக்கொண்டிருந்தது.

'செல்லையா... செல்லையா' என அழைத்தார் டாக்டர் கீழ்மாடியிலிருந்து... 'எஸ் சார்...வர்றேன்...' எனச் செல்லையாவின் குரல் பதிலாக வந்தது.

இராமு ஆய்வுகூடத்தினில் இருந்த பிரேதங்களை எப்படியாகிலும் ஒருமுறைக்கு தனிமையில் பரிசோதிக்க வேண்டும் எனத் தனக்குள் தீர்மானித்தவனாகத் தனது அறையை நோக்கி நடந்தான்.

(அடுத்த இரண்டு இதழ்களில் முடிவடையும்)




(5-ம் கலத் தொடர்ச்சி)

களுக்கு வழிகாட்டக்கூடியதாக அமைந்ததால் அவரை வாழ்த்திப் போற்றுவதிலும் அவரின் நூற்றுப்பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதிலும் நாம் பெருமைப் படவேண்டும்.

## ஷா கண்ட கல்விமுறை

ஆசிரியர்கள் பற்றி ஷா என்ன சொல்கிறார் தெரியுமா?

"நினைத்ததை எல்லாம் திணித்துவிட முயலும். அறிவற்ற தன்மையும் அவசியமானதைத் தேர்ந்தெடுத்து அவசியமற்றதை நீக்கிவிடும் அறிவாற்றலும் இல்லாததினால் இந்த ஆசிரியர்கள் மாணவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருக்கிறார்கள்" என்று சொல்கிறார்.

## போட்டிகள்

"உண்மையிலேயே நான் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பவில்லை. கேவலம், இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்றால், தோற்றுப்போனவரின் முகபாவத்தை என் மனம் சகிக்காது"

"நான் வெற்றிபெற்றால் என் சுய உணர்வு பறிபோனது போன்று எனக்குத் தெரிகிறது இதனால் தான் போட்டிகளை நான் வெறுக்கிறேன்.

## குடும்பத்தில்

சீரழிந்து கொண்டிருக்கும் தமது குடும்பத்தைப் பார்த்து ஷா மனம் நொந்தார் "என் குடும்பம் சீரழிந்து போவதற்கு என் தந்தையே காரணம் அவர் தன் இஷ்டப்படி நடந்ததால்தான் இந்தக் குடும்பம் இப்படி கேடுகெட்ட நிலையை அடைந்துள்ளது" என்று ஷா மிகவும் துக்கத்துடன் எழுதியுள்ளார்.

## கலைத்திறன்

லண்டனில் இருக்கும் போது தாயிடம் இசைக் கலை பயின்றுவந்தார். அரைகுறையாகவும், வழுவாகவும் அவர் பாடும்போது ஷாவின் தாய் வெளியே போயிருந்து அழுவாராம். என்னே அவர் தாயின் கலையின் திறன்.

கலையுள்ளத்துக்கு, பெற்ற தாய்க்கு தன்னால் அழுது வடிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதால் கடைசிக் காலத்தில் ஷா தம்மையே தாமே நொந்துகொண்டு "ஒரு கொலைக்குற்றத்தை நான் செய்திருந்தால்கூட, என் மனச்சான்று இவ்வளவுக்கு என்னை வருத்தியிருக்காது" என்று கூறியுள்ளார். அவரின் தாய்ப்பாசம்தான் என்னே.

## நகைச்சுவை

ஷா திருமணம் செய்தவர். 1898ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாந்தேதி நண்பர்கள் இருவருடன் கந்தலாய்ப்போன உடையுடன் திருமணப்பதிவு செய்யச் சென்றார்.

அந்த நண்பர்களில் ஒருவர்தான் மணமகனாக இருக்கவேண்டும் என்று எண்ணிய பதிவாளர், ஷாவை பிச்சை கேட்க வந்தவன் என்று எண்ணினாராம். ஆனால் அந்த நண்பர் கூறிய சாட்சியால் பதிவாளர் உண்மையை அறிந்தார். இதன்பின் "எனக்காக நண்பர் என் [illegible] விட்டுக்கொடுத்தார்" என்று நகைச்சுவையுடன் ஷா எழுதியுள்ளார்.

# மாணவருக்கு வழிகாட்டும் ஷாவின் வாழ்க்கைப்பாதை

— "சிந்தனைச் செல்வன்" —

அறிஞர் ஜோர்ஜ் பெர்னாட் ஷாவின் நூற்றிப்பத்தாவது பிறந்த தினம் உலகெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது. அவரது வாழ்க்கை நமக்குப் பலவிதத்திலும் உதவக்கூடியது. அதில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

## சிக்கன வாழ்க்கை

ஒரு சோடி உடு புகளைப் பல மாதங்கள் அணிந்து ஷா தன் வறுமையை நொந்து சீவித்தார். பல மாதங்கள் பாவித்ததினால் கிழிந்துபோன ஷேர்ட்டின் கைகளை மீண்டும் வெட்டித் தைத்து மாதக்கணக்காகப் பாவித்துவந்ததாக ஷா கூறியுள்ளார். கிழிந்துபோன சப்பாத்தும், அழுக்கடைந்து காணப்பட்ட தொப்பியும் ஷா எப்போதும் அணிந்திருந்தார். ஷா, லண்டன் நகரவீதிவழியாக பணமின்றிப் பலமுறை நடந்துசெல்வார். இதை அவர் ஓரிடத்தில் கூறும் போது லண்டன் மாநகர வீதியாகப் பலமுறை நான் சென்றுவந்தேன் அப்போது விற்பனைக்குக் கவர்ச்சிகரமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. நான் அவற்றைப் பார்த்தும், என் மனம் அவைபக்கம் செல்லாமல் கட்டுப்படுத்திக்கொண்டு சென்றேன் என்று கூறுகிறார்.

எளிமையான வாழ்க்கை வாழ்ந்ததால்தான் உயரிய அந்தஸ்தை ஷா அடைய முடிந்திருக்கிறது.

புகழுக்கும், பழிக்கும் கவலைப்படாத ஒருவகை உணர்ச்சியற்ற மனிதனாக ஷா வாழ்ந்து உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். இவரின் சிக்கன வாழ்க்கை, உலக மாணவர்

(3-ம் கலம் பார்க்க)

# விமானம் பிறந்தது எப்படி?

சரித்திரம் பேசுகிறது என்ற இத் தொடரில் முதலில் விமானக் கண்டுபிடிப்புப் பற்றி அறிவோம்.

விமானங்களைக் கண்டுபிடித்தவர்கள் யார் என்று கேட்டால் அது அமெரிக்க றைட் சகோதரர்கள் தான் என்று நீங்கள் பதிலளித்துவிடுவீர்கள் ஆனால் விமானத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன? எப்பொழுது முதல் விமானம் வானத்தில் ஊர்ந்தது என்பதெல்லாம் பலருக்குத் தெரியாது

விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கு பல முன்னோடிக் கண்டுபிடிப்புகள் உதவியாக இருந்திருக்கின்றன. இதன் பின்னரே விமானம் "பிறந்திருக்கிறது."

முதலாவது "காஸ் என்ஜின்" (Gas Engine) 1794-ம் ஆண்டில் ஸ்றீட் எனும் ஆங்கிலேயரினால் கண்டு பிடிக்கப்பட்டது. இதன்பின்னர் மோட்டார் சைக்கிள்களுக்கு உபயோகிக்கப்பட்ட 'பெட்ரோல் என்ஜின்' 1886-ம் ஆண்டிலும், மோட்டார்களுக்கு பயன்படுத்தப்படும் என்ஜின் (ஜெர்மனி, பிரான்ஸில்) 1890-ம் ஆண்டிலும் இதன் பின்னர் ஓரளவு பூரணமான

## சரித்திரம் பேசுகிறது

மோட்டார் என்ஜின்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் பின்னரே விமானங்களுக்கான என்ஜின்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன இதன் பலன்: காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லக்கூடிய "மெஷின்" கண்டுபிடிக்கமுடிந்தது!

1850-ல் விமானக் கண்டுபிடிப்பு வேலைகள் துரிதமாக

(7-ம் பக்கம் பார்க்க)

நாடும் நாமும்

# இளைஞர்களுக்கு நடைபெறும் அறிவுப் போட்டிகள்

— பைலொரூட் வுட்கோவிற் —

அண்மையில் நடைபெற்ற இரண்டாந்தரப் பாடசாலை மாணவர்களுக்கான அறிவுப் போட்டி யூகோஸ்லாவியா மாணவர்கள் அனைவருக்கும் பரந்த ரீதியில் பயன்தரக்கூடியது.

யூகோஸ்லாவியாவிற்கு தேவையான விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் உளர் என்ற திருப்தியை இது ஏற்படுத்துகின்றது.

இந்தப் போட்டி இளைஞர்களுக்கான விஞ்ஞானம் என்றே அழைக்கப்பட்டது. இப்போட்டி முதலில் யூகோஸ்லாவியாவில் உள்ள ஆறு பிரதேசங்களிலும் தனித்தனியே நடாத்தி இறுதியில் பிரதேசப் போட்டியில திறமையான மாணவர்களுக்கான போட்டி பெல்கிரேட்டில் அமைதியாக நடைபெற்றது. இவ்இறுதிப் போட்டியில் 52 மாணவர்கள் இரசாயனத்திலும் 52 மாணவர்கள் பௌதீகத்திலும் 62 மாணவர்கள் விலங்கு-தாவர இயல்களிலும் 4 மாணவர்கள் வானசாத்திரத்திலும் பங்குபற்றினர். போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் அனைவர்க்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதிப் போட்டி பெல்கிறேட்டில் உள்ள கணிதக் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களை பேராசிரியர் சினிஸ்ஸியா ஸ்ரான்கோவிற் (விலங்கு—தாவரவியல்கள்) பேராசிரியர் டாக்டர் ஐவான் சுப்பெக் (பௌதீகம்) பேராசிரியர் புக்கிற் மிற்கோவிற் (இரசாயனம்) பேராசிரியர் வொஹி லாங் மிஸ் கோவிற் (வானசாஸ்திரம்) ஆகிய தலைசிறந்த விஞ்ஞானிகள் பரிசோதித்தார்கள்.

இப்போட்டி இன்று யூகோஸ்லாவியாவின் முக்கிய நகரங்களில்தான் விஞ்ஞான ஆதிக்கம் நிலைநாட்டப்படுகின்றது என்பதைப் பொய்யாக்கி இவைகளுக்கு எந்த அளவிலும் யூகோஸ்லாவியாவில் உள்ள சிறிய நகரங்கள் சளைத்தவைகள் அல்ல என்பதை ருசுப்படுத்திவிட்டது. மாணவர்களின் விஞ்ஞான அறிவுக்கு இப்போட்டிகள் இளமையிலேயே வழிகோலியிருக்கிறது.

# மூளைக்கு வேலை

மூளைக்கு வேலைப் பகுதியை முன்பின் அறிவிக்காமல் திடீரென மீண்டும் ஆரம்பித்து விட்டீர்களே! எக்காரணம் கொண்டும் இனிமேல் நிறுத்திவிடாதீர்கள்" என்று சிலர் கடிதம் எழுதியுள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள். மாணவர் மலரைப் பொறுத்த வரை, உங்களிற் பலரும் எழுதிக் கொண்டே இருப்பவர்கள். "நான் எழுதும் விஷயம்" மாணவர் மலரில் வெளிவராதா என்று வாரந்தோறும் எதிர் பார்த்திருப்பவர்கள் இந்த வகையில் பலருக்கும் இங்கு நாம் சந்தர்ப்பம் கொடுப்பதால்தான் "மூளைக்கு வேலை" பகுதியை பலரும் விரும்புவதால் இனிமேல் இப்பகுதி நீண்டகால இடைவேளை இல்லாமல் (ஓரளவு) தொடர்ச்சியாக வெளிவருமென்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். என்ன திருப்திதானே?

சரி... கடைசியாகக் கேட்கப்பட்ட கேள்விக்குரிய விடைகளைக் கவனிப்போம். (1) அமெரிக்க ஜனாதிபதி சுட்டுக் கொலை செய்யப்பட்டார். (2) இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டார். (3) 14-12-55-ல் ஐ. நா. வில் இலங்கை சேர்ந்தது. (4) இந்தியப் பிரதமர் நேரு. (5) ஹிரோஷிமாவில் முதலாவது அணுகுண்டு வீசப்பட்டது. (6) ஐக்கிய நாடுகள் தினம்.

ஆறு கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியவர்களின் பெயர்கள் வருமாறு: இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்: கு சண்முகநாதன், கொக்குவில் மேற்கு; கு இராஜகோபால், நல்லூர்; ஆ கனகசூரியர், ஊரெழு மேற்கு; ஐ முருகையா, சூராவத்தை; கு சிதம்பரநாதன், யாழ்ப்பாணம்; குஞ வி நடராஜா, சித்தங்கேணி; கு பாப்பா, யாழ்ப்பாணம்; தா ரவீந்திரன், காரைநகர்; செல்வரத்தினம் மகாலிங்கம், திருநெல்வேலி; கணேச ஐயர் சௌந்தரராஜன், அனலைதீவு; நாகேஸ்வரி, எழுதுமட்டுவாள்; க சொர்ணம்பிகை, காரைநகர்; எஸ் ரஞ்சினி [illegible]லியா, புலோப்பளை; வி ஜெயரட்ணசிங்கம், இணுவில் மேற்கு; சி. சுதந்திரராஜா, தாவடி; ஏம் எல் எம

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்லூரிகள் கூடைப்பந்தாட்டப் போட்டி

# சென் ஜோன்ஸ் சாம்பியனானது

## ஜெயரத்தினம், அல்போன்சனின் சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வந்த கல்லூரிகளுக்கிடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டி யாழ். மத்தியகல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்றது.

இடபோட்டியில் சென். ஜோன்ஸ் கோஷ்டி 30—18 புள்ளிகளால் யாழ். மத்திய கல்லூரியைத் தோற்கடித்து சாம்பியனானது!

ஆரம்பத்திலேயே விறுவிறுப்பாகக் காணப்பட்ட இப்போட்டியில் மத்தியகல்லூரி வீரர்கள் தோல்வியுற்றபோதும் விட்டுக் கொடுக்காமல் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

இடைவேளையின் முன்பிலும் பார்க்க பின்னரே போட்டியின்தரம் உயர்வாகக் காணப்பட்டது. மத்திய கல்லூரியின் வீரனான என். ஜெயரத்தினமும் சென். ஜோன்ஸ் வீரனான ஜே. அல்போன்சும் கூடையில் பந்தை போடுவதில் சிறப்பாகக் காணப்பட்டனர். போட்டி முடிவில் ஜே. அல்போன்சஸ் 12 புள்ளிகளும், என். ஜெயரெத்தினம் 6 புள்ளிகளும் பெற்றது குறிப்பிடத் தக்கது.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். நல்லநாதன் 2 புள்ளிகள், ஜி. எஸ். சாந்திசரன் 2 புள்ளிகள், ஏ. எம். செல்லத்தம்பு 2 புள்ளிகள், வி. குருநாதன் 2 புள்ளிகள், ஆர். சாந்தகுணநாதன் 4 புள்ளிகளும் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். ஆர். நித்தியசீலன் 8 புள்ளிகளும் எஸ். எம். மூத்த தம்பி 4 புள்ளிகளும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இப்போட்டி யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## கூட்டுக் கோஷ்டியிடம் சென் ஜோன்ஸ் தோற்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் மத்திய கல்லூரி, யாப்பாணக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகிய கல்லூரிகளின் கூட்டுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சினேகித பூர்வமான கூடைப் பந்தாட்டப் போட்டியில் கூட்டுக்கோஷ்டி சென்-ஜோன்ஸ் கல்லூரியை 18—16 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

ஆரப்பத்திலிருந்து முடிவு வரையும் போட்டி ரசிப்பாகக் காணப்பட்ட போதிலும் இடைவேளைக்கு முன்னர் சென். ஜோன்ஸ் கோஷ்டியின் விளையாட்டு பாராட்டக் கூடியதாக இருந்தது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் விளையாட்டு இடைவேளையின் போது வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இப்போட்டியில் கூட்டுக் கோஷ்டியைச் சேர்ந்த லோகன்' சாந்தகுமார் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாக விருந்தது இவர்கள் தலா ஆறு புள்ளிகள் பெற்றுக் கொடுத்தனர். சென். ஜோன்ஸ் கோஷ்டியின் சிறந்த வீரரான ரி. விநாயகமூர்த்தி மொத்தம் 8 புள்ளிகள் பெற்றார். மற்றும் ரி. அல்போனஸ் 2 புள்ளிகள், எஸ். எம். மூத்ததம்பி 4 புள்ளிகள், ரி. ஞானக்கோன் 2 புள்ளிகளும், கூட்டுக் கொஷ்டியின் செல்லத்தம்பு 2 புள்ளிகள். நல்லநாதன் 2 புள்ளிகளும் பெற்றனர். இபோட்டி முடிவில் கூடைப்பந்தாட்ட வீரர்களுக்கு திருமதி இராசரெத்தினம் பரிசில்களை வழங்கினார். இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## நளாயினி இல்லம் சாம்பியனானது

நீர்வேலி, சனி

நீர்வேலி தெற்கு இந்து கலவன் வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி பாடசாலை மைதானத்தில் வட்டார வித்தியாதரிசி திரு வீ. தருமசங்கரி தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் நளாயினி இல்லம் முதலிடத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

திருமதி க. தருமசங்கரி வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கினார்.

—




## கொழும்பு

ஞாயிறு 7-8-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை - பேரம்பலம் செல்லையா, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 பாட்டு — தலைலட்சுமி ராமச்சந்திரா, 6-45 கிறிஸ்தவஆராதனை, 7-15 நேயர் கடிதங்கள், 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நிலைய ஒலிப்பதிவுகள், 10-00 மாதர்கேட்டவை.

## மூளைக்கு வேலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்பால், யாழ்ப்பாணம்; எச் ரமணி, மணற்காடு; சூசைப்பிள்ளை யேசுதாசன் நாராந்தனை வடக்கு; பாலினயகமூர்த்தி, தும்பளை; சி காசிப்பிள்ளை, எழுதுமட்டுவாள் வடக்கு.

தாமதித்து விடைகளை அனுப்பியவர்களின் பெயர்கள் இங்கு வெளியிடப்படவில்லை.

### கேள்வி மண்டலம்

இதோ இவ்வாரக் கேள்விகள்:

(1) பூமியிலிருந்து மிகவும் உயரமான தூரத்தில் விண்வெளிக் கப்பலில் பிரயாணம் செய்த இரண்டு விண்வெளி வீரர்களின் பெயர்களைத் தருக.

(2) ஐ. நா. மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு வருடமும் எப்பொழுது (மாதம், திகதி) அனுஷ்டிக்கப்படுகிறது?

(3) உலகின் முதல் விண்வெளி 'பிரயாணி' யார்?

(4) மிதப்பு விதியை வகுத்த தத்துவ ஞானி யார்?

(5) பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் ஜனவரி மாதத்தின் இறுதியில் உலகுக்கு அதிர்ச்சியைக் கொடுத்த பயங்கரச் சம்பவம் எது?

இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து கேள்விகளுக்குமுரிய சரியான விடைகளை தபாலட்டையில் எழுதி இம் மாதம் 12-ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய விலாசம்: மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ. 49 யாழ்ப்பாணம். சரியான விடைகளை அனுப்புபவர்களின் பெயர்கள் அடுத்த வாரம் மாணவர் மலரில் இடம் பெறும்.

--சாந்தா

## விமானம் பிறந்தது . . .

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

விருந்தபொழுதிலும் 1900ம் ஆண்டில்தான் இது வெற்றியளித்தது 1903-ல், றைட் சகோதரர்கள் முதற்தடவையாக 'பெட்ரோல் மோட்டா'ரின் உதவியுடன் ஒருவித விமானத்தை பறக்கவிட்டனர். இது முதலில் 40 யார் தூரமும் பின்னர் 270 யார் தூரமும் சென்றது. ஆனாலும் உண்மையான விமானம் இதன் பின்னரே உருப்பெற்றது.

1904-ல் றைட் சகோதரர்கள் தங்களது விமானத்தில் முதலில் மூன்று மைல் தூரம்வரை பறந்து சென்றனர். 1908-ல் 24 மைல் தூரம் சென்றனர். அக்காலத்தில் இந்த விமானங்களை (முதலாவது யுத்த காலத்தில்) எதிரிகளின் இடங்களைப் படம்பிடிக்க மட்டுமே (குண்டுகளை வீச அல்ல) பயன்படுத்தப்பட்டன.

விமானங்கள் ஓரளவு முன்னேற்றமாகத் தயாரிக்கப்பட்டதும் 1919-ல் முதற்தடவையாக அத்திலாந்திச் சமுத்திரத்தை 26 1/2 மணி நேரத்தில் விமானத்தில் கடந்து முடித்தனர். இதே வருடத்தில் பின்னர் இரண்டு ஆஸ்திரேலிய இளைஞர்கள் முதற்தடவையாக இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு விமானத்தில் பறந்து சென்றனர். 1926-ல் அமெரிக்காவைச் சேர்ந்த அட்மிறல் பைர்ட் வடதுருவம்மீது பறந்தார் 1933-ல் இமயமலைமீது இரண்டு விமானங்கள் முதற்தடவையாகப் பறந்துசென்று சாதனையை நிலைநாட்டின.

இதே காலத்தில் பெரிய விமானங்களை நிறுவும் வேலைகளை பல நாடுகள் ஆரம்பித்திருந்தன. இதன் பலனாக முதலாவது நீண்ட விமானச்சேவை (பிரயாணிகளுடனும்) ஐரோப்பாவிலிருந்து இந்தியா வழியாக ஆஸ்திரேலியாவுக்கும் ஐரோப்பாவிலிருந்து வடக்கு, தெற்கு அமெரிக்காவுக்கும், அமெரிக்காவிலிருந்து பசுபிக் சமுத்திரம் மீதாக ஆசியாவுக்கும் ஆரம்பமானது இச்சேவையின் போது கடல் விமானங்களே பயன்படுத்தப்பட்டன. அதாவது இச்சேவையில் ஈடுபடும் விமானங்கள் கடல் நீரிலும் இறங்க முடியும். இதற்குக் காரணம் தரையில் ஓடக்கூடிய வசதிகள் இவைகளுக்கில்லாததே. இப்படியாகத்தான் விமான சகாப்தம் ஆரம்பித்தது.

— மகான்





இந்த நேர்மையான புதிய பி பி பி 66 திறமையைத் தேடும் மக்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. தானே மை நிரப்பும் அதன்விசேஷ கருவியை நீங்கள் விரும்புவீர்கள்!.......... அதன் சுலபமாக எழுதும் தன் மையால், மணித்தியாலக்கணக்கில் எழுதினாலும் மணித்தியாலங்கள் நிமிடங்களாய் மாறிவிடும்!..........பேனாவிலிருந்து மை ஒழுகாமலிருப்பது உங்களின் விருப்பத்திற்குரியதாகும்..........அதன் நெடுத்த பார்வைக்கழகான தோற்றம் உங்கள் கண்களைக் கவரும்!.... ......உங்கள் கையெழுத்து திருந்தும்!........உண்மையாக பி பி பி 66 பேனாவின் சகல வாய்மைகளையும நீங்கள் விரும்புவீர்கள்!

# பி.பி.பி. 66

ஜப்பான் பிளட்டினம் கம்பெனியின் ஒரு தயாரிப்பு

பி பி பி 66 பேனாவானது ஆண் பெண் யாவர்க்கும் உகந்தது.



சகலபொருட்கடைகளிலும் கிடைக்கும் பி. பி. பி. 66 பேனாவை இன்றே கேட்டுப் பாருங்கள்.

ஏக விற்பனையாளர்;

ஜேஜேந்திரம்ஸ் லிமிட்டெட், மகாராஜா பில்டிங். பாங்ஷால் வீதி, கொழும்பு-11,

டெலிபோன்: 3603


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

# சிங்கள ஆசிரியர் விரைவில் வருவர்

## “தமிழரசார் எதிர்ப்பதால் தாமதமேற்படவில்லை”

### எம்.பி.யின் கேள்விக்கு உதவிமந்திரிபதில்

கொழும்பு, சனி

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று கல்வி அமைச்சின் பார்லிமெண்டரிக்காரிய தரிசி திரு. காமினி ஜயசூரியா இன்று காலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

தெலிபோவித்த எம். பி. திரு. தனபாலா வீரசேகராவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. ஜயசூரியா மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்பட்ட சிங்கள ஆசிரியர்கள் எப்பொழுது அங்கு சென்று பதவியேற்பார்கள் என தெலிபோவித்த எம். பி. கேட்டார். திரு. வீரசேகராவின் உபகேள்வியொன்றுக்கு உதவிமந்திரி ஜயசூரியா பதிலளிக்கையில்,

தமிழரசுக்கட்சியினருக்கும் பிரதம மந்திரிக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளோ, தமிழரசுக்கட்சி காட்டும் எதிர்ப்போ, சிங்கள ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவதில் தாமதமேற்படுத்தவில்லை என்று கூறினார்.

சிங்கள ஆசிரியர்கள் விரைவில் அனுப்பப்படுவார்களென வாக்குறுதியளிக்கும்படி உதவி மந்திரியை திரு. வீரசேகரா கேட்டபொழுது, உதவிசபாநாயகர் திரு ஷேர்லிகொரியா குறுக்கிட்டு, உதவிமந்திரி பைபிள் மீது சத்தியம் செய்ய வேண்டுமெனக் கேட்கிறீரா என்று கேட்டார்.

இதன்பின் உதவி மந்திரியின் வார்த்தையை தாம் ஏற்றுக்கொள்வதாக திரு. வீரசேகரா கூறினார்.

---

# முதுகையும் கழுத்தையும் குண்டு துளைத்திருந்தது!

## வல்வெட்டித்துறை கடற்கரை துப்பாக்கிச் சூட்டு வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, சனி

“சென்றமாதம் 10-ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்கரையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலஞ்சென்ற கனகசபை மோகனதாஸ் என்பவரின் சடலத்தை பரிசோதனை செய்தேன். அவரின் முதுகின் கீழ்ப் பாகத்தில் துப்பாக்கிக்குண்டு ஒன்று துளைத்துக்கொண்டும் அவரது இடதுபக்கக் கழுத்தைத் துளைத்துக்கொண்டும் வெளியில் சென்றிருக்கிறது. அதன் காரணமாகவும் அதிர்ச்சியின் காரணமாகவும் மரணம் சம்பவித்திருக்கலாமெனக் கருதுகிறேன்”

இவ்வாறு பருத்தித்துறை வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஆர். சோமசுந்தரம் சாட்சியமளிக்கும்போது கூறினார். இவ் வழக்கு பருத்தித்துறைநீதிபதி திரு ரெபேரா — சில்வா முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இறந்தவரின் சார்பில் ஆஜரான அட்வக்கேட் திரு. ஏ. பி. செரீபிம் கேட்ட கேள்வியொன்றுக்குடாக்டர் பதிலளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் ஒரு உயரமான இடத்தில் நிற்கும் பொழுது அவர் அருகில் ஒரு பள்ளமான இடத்திலிருந்து செங்குத்தாகச் சுட்டாலும், அல்லது இறந்தவர் குனிந்த நிலையில் துப்பாக்கிக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நின்றிருந்தாலும் மேற்படி காயம் ஏற்பட்டு மரணம் சம்பவித்திருக்கலாமெனக் கருதுகிறேன்.

கப்டன் ஜயானந்த விஜயசிங்கா சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

நான் பலாலி இராணுவ முகாமுக்கும் வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கும் அதிகாரியாக இருக்கிறேன். கள்ளக்குடியேற்றத்தையும், கள்ளக் கடத்தலையும் தடுக்கும் வேலைகளில் ஈடுபடும் சுங்க இலாகாவுக்கோ அல்லது கடற்படையினருக்கோ, அல்லது இராணுவத்தினருக்கோ துப்பாக்கியால் சுட்டுமரணம் விளைவிப்பதற்கு சட்டம் இல்லை. சம்பவம் நடந்த தினம் கோப்ரல் தயாரத்தின, பெர்னண்டோ, சார்ஜன்ட் சொலமன் ஆகியோர் அவ்விடத்தில் கடமையாற்றினார்கள்.

இறந்தவரின் சார்பில் திரு என். நடராசாவின் அனுசரணையுடன் அட்வகேட் திரு கே. மோதிலால் நேரு அட்வகேட் திரு. ஏ.பி.செருபிம் ஆஜரானார்கள். காங்கேசன்துறை ஏ. எஸ். பி திரு. டபிள்யு லியனகே வழக்கை நடத்தினார்.

மேல்விசாரணையைநீதிபதி இம்மாதம் 21-ந் திகதி ஒத்திவைத்துள்ளார்.

---

# தமிழ்காங்கிரஸ்மாநாடு இன்று காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 21-வது ஆண்டு மகாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணம் எம். பி. யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டின் முதல் நிகழ்ச்சி காலை 9 மணிக்கு காங்கிரஸ் கொடி ஏற்றுவதுடன் ஆரம்பமாகிறது.

வவுனியா எம் பி. யும் மகாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. தா சிவசிதம்பரம் வரவேற்புரை நிகழ்த்துவார். காரியதரிசியினதும் தனாதிகாரியினதும் அறிக்கைகளைத் தொடர்ந்து திரு ஜி. ஜி. பொன்னம்பலம், தமது தலைமை பேருரையை நிகழ்த்துவார்.

இதன் பின் சொற்பொழிவுகள் நடைபெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளின் போது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் புது வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும்.

மாலையில் யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் முதலியார் ஸி. முத்துத்தம்பி தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

---

## 8 சதமாக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் குறைந்த தொகை துண்டுவிழக்கூடிய முறையில் வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதென்றும் திரு. ஜயவர்த்தன கூறினார்.

முன்னைய அரசாங்கங்களின் அமைச்சர் தயாரித்துச் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டங்கள் ‘அமெச்சூர்’ முறையில் இருந்தனவென்றும் இம்முறை நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத்திட்டம் தொழில் ரீதியாக இருக்கிறதென்றும் சுகாதார அமைச்சர் சொன்னார்.

வரவு- செலவுத் திட்ட விவாதத்தின்மீது திரு ஆர் எஸ் எஸ். பெரேரா, திரு சம்லி குணவர்த்தன, திரு அனில் மூனசிங்கா ஆகியோரும் பேசினர்.

---

## அரசியல் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஆர். ஜி. சேனநாயகா வேலைநிறுத்தம் செய்த ஊழியர் பற்றி பிரஸ்தாபித்ததற்குப் பதிலளிக்கையில் கூறினார்.

ஜனவரி 8-ந் திகதி அரசாங்கஊழியர் தாமாகவேலை நிறுத்தம் செய்தனரா அன்றேல் தொழிற்சங்கங்களின் உத்தரவின் மீது வேலைநிறுத்தம் செய்தனரா என்பது பற்றி ஆராயப்படுவதாகவும் அவர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கலாமென அரசாங்கம் பரிசீலனைசெய்து ஒரு முடிவுக்கு வருமென்றும் நிதிமந்திரி கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணை மீது திரு. ஆர். ஜி. சேனநாயகா பேசுகையில் சுமார் பத்தாயிரம் அரசாங்க ஊழியர்கள் சம்பளம் வெட்டப்பட்டும், தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டும், வேலை நீக்கம்செய்யப்பட்டும் பழி வாங்கப்பட்டுள்ளனரென்றும் கூறினார். திரு பண்டாரநாயகா ஆட்சியிலிருந்த பொழுது ஒருநாள் அடையாளவேலைநிறுத்தம் செய்த ஊழியருக்கு வெட்டப்பட்ட சம்பளம் யு. என். பி. ஆட்சிக்கு வந்ததும் திருப்பிக் கொடுக்கப்பட்டதென்றும் திரு. ஆர். ஜி. சுட்டிக்காட்டினார்.

---

வருமான வரிவிதி முறையை ஆராயும் கமிஷன்

# சேர் ஆர்தர்ரணசிங்கா தலைமையில் 2 நிபுணர் நியமனம்

கொழும்பு, சனி

மத்திய வங்கியின் முன்னாள் கவர்னரும், நிரந்தரக் காரியதரிசியுமான சேர். ஆர்தர்ரணசிங்கா, வருமான வரிவிதிப்பு முறை பற்றி ஆராய நியமிக்கப்படும் கமிஷனின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இஸ்ரேலிய வருமானவரி நிபுணர் ஒருவரும் ஐ நா. நிபுணர் ஒருவரும் கமிஷனின் இதர அங்கத்தவர்களாக நியமிக்கப்படவிருக்கின்றனர். வருமான வரிபற்றிய முறை முழுவதையும் இந்தக் கமிஷன் ஆராய்ந்து அதை சீர்திருத்துவதற்கான சிபார்சுகளைத் தெரிவிக்கும் வரிவிதிப்புக் கமிஷன் கடைசியாக 1955-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்ட உரைக்கு முன்னரே, வரிவிதிப்பு முறைபற்றி ஆராயவிருக்கும் கமிஷனின் தலைவராக சேர் ஆர்தர் ரணசிங்கா நியமிக்கப்படுவாரென்பதை ‘ஈழநாடு’ மட்டுமே பிரசுரித்திருந்தது வாசகநேயர்களுக்கு நினைவிருக்கும்.

---

டெஸ்ட் கிரிக்கட்

# இங்கிலாந்து 240 ரன்களுடன் ஆட்டம் இழந்தது

லீட்ஸ், ஆக. 6

இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் மேற்கு இந்திய கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்ற நான்காவது கிரிக்கெட்டெஸ்ட்டின் முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது. ஜொலிவேரா 88 ஓட்டங்களையும் இக்ஸ் 41 ஓட்டங்களையும், மில்பர்ன் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மேற்கிந்திய கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 500 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் பொழுது இங்கிலாந்துக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்து ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்களை எடுத்திருந்தது.

---

# பூரியில் கரைசேர்ந்த இலங்கை மீனவரை கொண்டுவர முயற்சி

## எம். பீ. நடவடிக்கை

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறையிலிருந்து மீன்பிடிக்கச்சென்று காணமற்போய், பின்னர் இந்தியாவிலுள்ள ஒரிஸா ராஜ்யத்திலுள்ள பூரி என்னுமிடத்திலுள்ள கடற்கரையில் மயக்கமுற்றநிலையில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று மீனவர்களையும் தாயகத்துக்குத் திருப்பி அழைப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்கள் மூவரும் பூரியிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்றுவருவதாகக் கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாதம் 12ந் தேதி வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து இயந்திரப் படகொன்றில் மீன்பிடிக்கச் சென்ற வி. இரத்தினவடிவேலு, கே. தங்கராசா ஈ. பாலசிங்கம் ஆகிய மூவரும் பல நாட்களாகியும் வீடு திரும்பாதது குறித்து பருத்தித்துறை எம். பி.

(5-ம் பக்கம் பார்க்க)

---

# ஆழக்கிணற்றில் நீரைக்காணோம்; அருகேசென்றால் இடியும் அபாயம்!

இமையாணன், சனி

இமையாணனிலுள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளவுக்குள் தற்பொழுது தோண்டப்பட்டுவரும் ஆழமான பாடசாலைக் கிணறு ஒன்றினால், இதன் சுற்றுப்புறத்தில் நடமாட முடியாத பயங்கர நிலை உருவாகியுள்ளதாம்!

சுமார் முப்பது அடிஆழத்தில் தோண்டப்பட்டும் நீரூற்றுக்காணப்படாத நிலையிலுள்ள இக்கிணற்றில் இடைநீர் வேர்வைக் கசிவு காரணமாக நடுப்பகுதி சுமார் பன்னிரண்டு அடி சுற்றுப்புறத்துக்கு நாளாந்தம்பெருமளவில் மண்குடைவும் இடியும் ஏற்பட்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. இதன் விளைவாக இக்கிணற்றைச் சுற்றியுள்ள பகுதியில் நடமாடுவதும் பயங்கரமாகவிருக்கிறதாம்.

இதுசம்பந்தமாகப் பாடசாலை பெற்றோர்—ஆசிரியர் சங்கம், வடமாநில உதவி வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் இக்கிணற்றைமேலும்தோண்டுவதை [illegible] முறையிட்டுள்ளது.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org